*பிரஸார் பாரதி*

*அகில இந்திய வானொலி, சென்னை-4*

*19 11 2025        7.15*

*புதன்கிழமை        இரவு*

*ஆகாஷவாணி செய்திகள்*

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

- *டிஜிட்டல் இந்தியா இயக்கம் எண்ணற்ற வாய்ப்புகளின் திறவுகோலாக உள்ளது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.*

- *வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க அனைவரும் பங்களிக்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.*

- *பீகாரில் தேசிய ஜனநாயக கூட்டணியின் சட்டப்பேரவை குழுத் தலைவராக திரு நிதிஷ்குமார் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.*

- *இரண்டாம் கட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் இதுவரை 99 சதவீத விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.*

- *உலகக்கோப்பை இறுதி குத்துச்சண்டை போட்டியில் இந்தியா இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது.*

*--- இனி விரிவான செய்திகள் ---*

*டிஜிட்டல் இந்தியா இயக்கம் எண்ணற்ற வாய்ப்புகளின் திறவுகோலாக உள்ளது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.*

*புதுதில்லி தேசிய தொழில்நுட்ப மையத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.*

*ஊரகப் பகுதிகளுக்கும் அதிவிரைவு இணைய தள சேவை மற்றும் தொழில்நுட்பங்கள் சென்றடைந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.*

*டிஜிட்டல் கிராமங்களை உருவாக்குவதில் தேசிய தொழில்நுட்ப மையம் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.*

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்குகளை எட்ட அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

சுற்றுச்சூழல் பாதிப்புகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இந்தியா முன்னணியில் உள்ளதாகவும் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

>><><><><><<

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க அனைவரும் பங்களிக்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் சாய்பாபா நூற்றாண்டு கொண்டாட்ட நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

சுகாதாரம், கல்வி, ஊரக மேம்பாடு, குடிநீர் விநியோகம், ஊட்டச்சத்து, தூய எரிசக்தி பயன்பாடு ஆகியவற்றுக்காக சத்ய சாய் அறக்கட்டளை ஆற்றிவரும் பணி பாராட்டுதலுக்குரியது என்று அவர் குறிப்பிட்டார்.

செல்வ மகள் சேமிப்புத் திட்டத்தின்கீழ் இந்த அறக்கட்டளை 20 ஆயிரம் கணக்குகளை தொடங்க மேற்கொண்ட நடவடிக்கைகளையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த திட்டத்தின் கீழ் இதுவரை 4 கோடிக்கும் மேற்பட்ட கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பெண் குழந்தைகளின் நிதி பாதுகாப்பை இந்த திட்டம் உறுதி செய்திருப்பதாகவும் அவர் கூறினார்.

சமூக பாதுகாப்பு திட்டத்தின்கீழ் பயனடைவோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக கூறிய அவர், 2014 ஆம் ஆண்டு 25 கோடியாக இருந்த பயனாளிகளின் எண்ணிக்கை, தற்போது 100 கோடி அளவுக்கு அதிகரித்துள்ளதாக கூறினார்.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு ஊக்கமளிக்க வேண்டியதன் அவசியத்தையும் திரு நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து தமிழகம் வந்த பிரதமர், கோவையில் இயற்கை வேளாண்மை மாநாட்டில் கலந்து கொண்டு விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின்கீழ் 21 ஆவது தவணைத் தொகையை விடுவித்து பேசினார்.

*இயற்கை வேளாண்மையை அறிவியல் சார்ந்த இயக்கமாக மாற்ற வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.*

*(சவுண்ட் பைட் – மோடி – 47 செகண்ட்ஸ்)*

*இந்த நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டத்தின்கீழ் விடுவிக்கப்பட்ட தவணைத் தொகை தங்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி மாரியப்பன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் – விவசாயி – 46 செகண்ட்ஸ்)*

*>><><><><><<*

*பீகாரில் தேசிய ஜனநாயக கூட்டணியின் சட்டப்பேரவை குழுத் தலைவராக திரு நிதிஷ்குமார் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.*

*இன்று பாட்னாவில் நடைபெற்ற அந்த கூட்டணியின் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பங்கேற்ற கூட்டத்தில் இதற்கான தீர்மானத்தை ஐக்கிய ஜனதா தள கட்சியைச் சேர்ந்த திரு விஜய் சௌதிரி மற்றும் பிஜேபியின் திரு Samrat Choudhary, திரு Vijay Sinha ஆகியோர் முன்மொழிந்தனர்.*

*இதர கூட்டணி கட்சிகளின் உறுப்பினர்கள் இதனை வழிமொழிந்தனர்.*

*இதனைத் தொடர்ந்து திரு நிதிஷ்குமார், ஆளுநர் திரு ஆரீப் முகமது கானை சந்தித்து தமது ராஜினாமா கடிதத்தை அளித்ததோடு புதிய அரசு அமைக்க உரிமை கோரினார்.*

*பீகார் முதலமைச்சராக 10 ஆவது முறையாக திரு நிதிஷ்குமார் நாளை பதவியேற்கிறார்.*

*பாட்னாவில் உள்ள காந்தி மைதானத்தில் பதவியேற்பு விழா நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*இந்த நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி, பிஜேபி ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள் மற்றும் மத்திய அமைச்சர்கள் பலர் பங்கேற்கவுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.*

*>><><><><><<*

நாடுமுழுவதும் ஒன்பது மாநிலங்கள், மூன்று யூனியன் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் இதுவரை 99 சதவீத விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

கடந்த நான்காம் தேதி தொடங்கிய இப்பணிகள், அடுத்த மாதம் 4 ஆம் தேதி வரை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணையத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்படி 50 கோடியே 35 லட்சம் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டு உள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>><><><><><<

நாடுமுழுவதும் ஐந்து லட்சத்து 67 ஆயிரம் கிராமங்கள் திறந்தவெளி கழிப்பறை இல்லாத கிராமங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

உலக கழிப்பறை தினம் இன்று கடைபிடிக்கப்படுவதையொட்டி மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் அளித்த ஒத்துழைப்பே இதற்கு காரணம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>><><><><><<

விளையாட்டுச் செய்திகள்

உலகக்கோப்பை இறுதி குத்துச்சண்டை போட்டியில் இந்தியா இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது.

கிரேட்டர் நொய்டாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 65 கிலோ எடைப்பிரிவில் Neeraj Phogat -ம், ஆடவர் 85 கிலோ எடைப்பிரிவில் Jugnoo -ம் வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.

மகளிர் 57 கிலோ எடைப்பிரிவில் Jasmine Lamboria-வும், 48 கிலோ எடைப்பிரிவில் மீனாட்சியும், 70 கிலோ எடைப்பிரிவில் அருந்ததியும் ஆடவர் 55 கிலோ எடைப்பிரிவில் பவன் பர்த்வால், 50 கிலோ எடைப்பிரிவில் Jadumani Singh-ம் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளனர்.

---------------------

*19 வயதிற்குட்பட்டோருக்கான உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.*

*இப்போட்டி ஜிம்பாப்வே மற்றும் நமிபியாவில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் தேதி தொடங்கி, பிப்ரவரி மாதம் 6 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.*

*இந்தியா, அமெரிக்கா உட்பட 16 அணிகள் இதில் பங்கேற்கின்றன.*

*இந்தியா முதல் போட்டியில் அமெரிக்காவை எதிர்கொள்கிறது.*

--------------------

*தாய்லாந்து சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Kyra Raina காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-8, 21-9 என்ற செட்கணக்கில் ஹாங்காங்கின் Fong Tung Gianna -வை வென்றார்.*

-------------------

*ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-17, 21-13 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் Su Li Yang -ஐ வென்றார்.*

-------------------

*தமிழக – உத்தரப்பிரதேச அணிகளுக்கு இடையேயான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டி டிராவில் முடிவடைந்தது.*

*கோவையில் நடைபெற்ற இப்போட்டியின் கடைசி நாளான இன்று ஆட்டநேர இறுதியில் தமிழக அணி இரண்டாவது இன்னிங்சில் 2 விக்கெட் இழப்புக்கு 103 ரன் எடுத்தது.*

*முதல் இன்னிங்சில் தமிழக அணி 455 ரன்னுக்கும், உத்தரப்பிரதேச அணி 460 ரன்னுக்கும் ஆட்டமிழந்தன.*

-------------------

*Deaflympics* போட்டியில் இந்தியாவின் *Kushagra Singh Rajawat* வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 50 மீட்டர் துப்பாக்கிச் சுடும் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

*>> End of News <<*